2002 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 128, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

128—

நீதிமன்றங்கள்

***7469—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி வட்டங்களில், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி வட்டங்களில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் அருப்புக்கோட்டை தொகுதியில்தான் நீதிமன்றங்கள் இல்லை. மீதம் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளில் நீதிமன்றங்கள் உள்ளன. பெயர்தான் அருப்புக்கோட்டை தொகுதி என்று உள்ளது. அருப்புக்கோட்டை இல்லாதது அருப்புக்கோட்டை தொகுதியாகும். அருப்புக்கோட்டை தொகுதி என்பது முற்றிலும் கிராமங்கள் அடங்கிய பின்தங்கிய தொகுதியாகும். கிராம மக்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு சராசரியாக 70 கிலோ மீட்டர், 80 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், கிராம மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். எனவே, அரசாணையின்படி திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி தாலுக்காக்களில் நீதிமன்றங்களை அமைத்துத் தர, வரும் நிதி ஆண்டிலாவது நமது அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 12

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி involvement-ஐ நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ ஹாஸ்டல் ஒவ்வொரு தொகுதிக்கும் வேண்டும் என்பதைப்போல, அருப்புக்கோட்டை தொகுதிக்கு என்று ஒரு நீதிமன்றம் கேட்டிருக்கிறார். நீதிமன்றம் என்று சொல்லும்போது, ஓரளவிற்கு வழக்குகள் இருக்க வேண்டும். திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி போன்ற இடங்களில் மொத்த வழக்குகள் என்று பார்த்தால் 737 வழக்குகள்தான் இப்போது இருக்கின்றன. எனவே, இந்தச் சூழ்நிலையில் அந்த இடத்தில் ஒரு புதிய நீதிமன்றம் ஆரம்பிக்கப்படுவது என்ற அந்தக் கருத்து ஏற்புடையதாக இல்லை. திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி வட்டங்களிலுள்ள வழக்குகளெல்லாம் அருப்புக்கோட்டை நீதிமன்றத்திலே விசாரிக்கப்படுகின்றன. அருப்புக்கோட்டைக்கும், காரியாப்பட்டிக்கும் உள்ள தூரம் 24 கிலோ மீட்டர். அருப்புக்கோட்டைக்கும், திருச்சுழிக்கும் உள்ள தூரம் 14 கிலோ மீட்டர். எனவே, இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இதனை ஏற்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, திரு. சி. சண்முகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

129—

கோயில்களைப் புதுப்பித்தல்

*9101—**திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் பழுதடைந்துள்ள கோயில்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு, புதுப்பிக்கப்பட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS